செ.வெ.எண்: நாள்: 12.01.2022

## நாமக்கல் மாவட்டம்
## ஜல்லிக்கட்டு போட்டிகள் நடத்துவது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி.சிங்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடத்துவது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி.சிங்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (12.01.2022) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது,

உச்சநீதிமன்ற அறிவுரைப்படி, ஜல்லிக்கட்டு ஒழுங்குபடுத்தும் சட்டம் 2009 (தமிழ்நாடு சட்டம் 29/2009) நிறைவேற்றப்பட்டு 26.8.2009 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்ட இடங்களைத்தவிர வேறு இடங்களில் ஜல்லிகட்டு போட்டிகள் நடத்த அனுமதி இல்லை. ஜல்லிகட்டு நிகழ்ச்சி நடைபெறும் நாளன்று கால்நடை மருத்துவர்களால் காளைகள் பரிசோதிக்கப்படும். ஜல்லிகட்டில் பங்குபெறும் காளைகளுக்கு போதிய உணவு, குடிநீர் வழங்க வேண்டும். காளை அருகில் அதன் உரிமையாளர் இருக்கவேண்டும். வாடிவாசலின் முகப்பு பகுதியில் சிசிடிவி கண்காணிப்பு கேமரா பொருத்தப்படவேண்டும். காளை அடக்கும் நிகழ்வு நடைபெறும் இடம் முழுவதும் படம்பிடிக்கும் வகையில் கேமிராக்கள் பொருத்த வேண்டும்.

போட்டியில் பங்கேற்பவர்களுக்கு அடையாள அட்டையினை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் வழங்கிடவேண்டும். ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்கும் பதிவு செய்யப்பட்ட வீரர்களை தனிமைப்படுத்திக் காட்டுவதற்காக அவர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான சிறப்பு உடைகள் வழங்கவேண்டும். இளைஞர்கள் காளையின் திமிலை மட்டுமே பிடித்து அடக்கவேண்டும். மேலும் 15 மீட்டர் தூரம் அல்லது 30 வினாடிகள் அல்லது காளை மூன்று துள்ளல் துள்ளும் வரை மட்டுமே காளையை அடக்கவேண்டும். மாடுபிடி வீரர்கள் காளையின் வால் மற்றும் கொம்பை பிடிக்ககூடாது, விதிகளை மீறும் மாடுபிடி வீரர்கள் தொடர்ந்து ஜல்லிகட்டில் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

மாடுபிடி வீரர்கள் மற்றும் காளைகளுக்கு காயம் ஏற்படாமல் இருக்க வாடிவாசலிலிருந்து 15 மீட்டர் தூரத்திற்கு தேங்காய் நார்களை தரையில் பரப்ப வேண்டும். வாடிவாசலிருந்து 15 மீட்டருக்கு அப்பால் மட்டுமே பார்வையாளர் அரங்கம் அமைக்கப்படவேண்டும். வாடிவாசலிலிருந்து காளை அடக்கும் தூரமான 15 மீட்டரைக் கடந்த காளைகளை மாடுபிடி வீரர்கள் தொடக்கூடாது.

ஜல்லிகட்டு முடிந்த பின் வாடிவாசலிலிருந்து குறைந்தது 100 மீட்டர் தூரமாவது காளை ஓடுமளவிற்கு இடமளிக்கவேண்டும். பார்வையாளர் அமர்ந்து பார்க்க அரங்கத்தை அமைக்கவேண்டும். அதன் உறுதித்தன்மையினை பொதுப்பணித்துறை மூலம் உறுதிசெய்யப்படும். காளைகள் பார்வையாளர்களை தாக்காமல் இருக்கும் வகையில் ஜல்லிகட்டு வாடிவாசலிலிருந்து காளை சென்று சேரும் கொட்டகை வரை எட்டு அடி உயரத்தில் இரண்டு அடுக்கு தடுப்பு அமைக்கவேண்டும். தேவைப்படும்போது காளைகளை உடனடியாக வெளிக்கொண்டுவர அவசர வழியை கண்டிப்பாக ஏற்படுத்தவேண்டும்.

கால்நடை பராமரிப்பு துறை அலுவலர்கள் ஜல்லிக்கட்டில் பங்குபெறும் அனைத்து காளைகளுக்கும் மருத்துவ பரிசோதனை செய்யவேண்டும். ஜல்லிக்கட்டு விளையாட்டில் பங்கேற்கும் மாடுபிடி வீரர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி விளையாட்டில் பங்கேற்க உடல் ரீதியாக தகுதியான நபர்தான் என்பதை சுகாதாரத்துறையினர் உறுதி செய்ய வேண்டும். ஆம்புலன்ஸ் வாகனங்களை தயார் நிலையில் வைத்திருக்கவேண்டும். காயமடையும் வீரர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க மருத்துவக்குழு தயார் நிலையில் இருக்கவேண்டும்.

அரசினால் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து அறிவுரைகளையும் ஜல்லிக்கட்டு போட்டி நடத்துபவர்களும், அனைத்து துறை அரசு அலுவலர்களும் தவறாமல் பின்பற்றிட வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.த.மஞ்சுளா, திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தே.இளவரசி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.த.சிவசுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.சீனிவாசன் உள்பட அரசு அலுவலர்கள், ஜல்லிக்கட்டு போட்டி நடத்துபவர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் நாமக்கல் மாவட்டம்.

## ஜல்லிக்கட்டு விழா நடத்துபவர்கள்

## கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள்

கோவிட் - 19 நோய்த்தொற்று பரவலை கட்டுப்படுத்துவது தொடர்பாக மருத்துவ நிபுணர்களின் கருத்துகளின் அடிப்படையில் 10.01.2022வரை பல்வேறு கட்டுபாடுகளுடன் ஊரடங்கு நீட்டிப்பு செய்து அசராணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

* தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டைப் பாதுகாக்கும் வகையில் நடத்தப்பட்டு வரும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் மக்கள் பெருமளவில்

மகிழ்ச்சியோடு பங்குபெற்று வருகின்றனர். ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி என்பது காளைகள் மற்றும் மாடுபிடிப்பவர்கள் மட்டுமல்லாமல் பொதுமக்களும் பார்வையாளர்களாக பங்கேற்கும் நிகழ்ச்சியாகும்.

* திறந்தவெளி விளையாட்டு மைதானங்களில் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி விளையாட்டுப் போட்டிகள் நடத்த ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில்,ஜல்லிகட்டு போட்டியினை நிலையான வழிகாட்டு நெறிமுறைகளுடன், தற்போது கொரோனா தொற்று காரணமாக எதிர்வரும் 2022 ஆம் ஆண்டில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியினை கீழ்கண்ட நிபந்தனைகளுடன் நடத்த அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

* <u>கோவிட்-19 நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்த பின்பற்றப்பட வேண்டிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் :-</u>

1. ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளில் காளைகளின் உரிமையாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்களும் பெரும் பங்கு வகிப்பதால், ஒரு காளையுடன் சுமார் 5 முதல் 6 நபர்கள் வருவது வழக்கம் . இதனை கட்டுப்படுத்தி ஒரு காளையுடன் ஒரு உரிமையாளர் மற்றும் காளையுடன் நன்கு பழக்கமுள்ள ஒரு உதவியாளர், இரண்டு டோஸ் கொரோனா தடுப்பூசி போட்டதற்கான சான்று மற்றும் நிகழ்ச்சி நடைபெறும் தேதியிலிருந்து 2 நாட்களுக்குள் கோவிட் தொற்று இல்லை (RT-PCR Test) என்பதற்கான சான்று ஆகியவற்றை வைத்திருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். காளையின் உரிமையாளர் மற்றும் அவரது உதவியாளருக்கு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அடையாள அட்டை வழங்கப்படும். மேலும், அடையாள அட்டை இல்லாத நபர்களுக்கு ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடைபெறும் வளாகத்திற்குள் நுழைய அனுமதி இல்லை.
2. காளைகளை பதிவு செய்யும் பொழுது அக்காளையின் உரிமையாளர் மற்றும் உடன்வரும் உதவியாளர் ஆகியோரும் பதிவு செய்தல் வேண்டும். ஜல்லிக்கட்டில் பங்குபெறும் காளைகளின் பதிவு ,நிகழ்ச்சி நடைபெறுவதற்கு 3 நாட்களுக்கு முன்பே முடிக்கப்படவேண்டும்.
3. ஜல்லிக்கட்டு , மஞ்சுவிரட்டு மற்றும் வடமாடு நிகழ்ச்சிகளில் மாடுபிடி வீரர்கள் 300 நபர்களுக்கு மிகாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்படுகிறது.
4. எருதுவிடும் நிகழ்ச்சியில் 150 வீரர்களுக்கு மிகாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்படுகிறது.
5. ஜல்லிக்கட்டில் பங்குபெறும் வீரர்களுக்கு, நிகழ்ச்சி நடைபெறும் தேதியிலிருந்து 3 நாட்கள் முன்பாக பதிவு செய்து, மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அடையாளஅட்டை வழங்கப்படவேண்டும். மேலும் அடையாள அட்டை இல்லாத வீரர்கள் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடைபெறும் வளாகத்திற்குள் நுழைய

அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

6. ஜல்லிக்கட்டில் பங்குபெறும் வீரர்களுக்கு, இரண்டு டோஸ் கொரோனா தடுப்பூசி போட்டதற்கான சான்று மற்றும் நிகழ்ச்சி நடைபெறும் தேதியிலிருந்து 2 நாட்களுக்குள் கோவிட் தொற்று இல்லை(RT -PCR Test) என்பதற்கான சான்று பெறப்பட்டவர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.
7. தமிழ்நாடு அரசினால் வெளியிடப்படும் கொரோனா தடுப்பு நடைமுறைகளை பின்பற்றி பார்வையாளர்கள், திறந்த வெளி அரங்கின் அளவிற்கேற்ப (Total Capacity) சமூக இடைவெளியை கடைபிடிக்கும் வகையில் அதிகபட்சமாக 150 பார்வையாளர்கள் அல்லது அனுமதிக்கப்பட்ட இருக்கை எண்ணிக்கையில் 50 சதவிகிதத்திற்கு மிகாமல் இவற்றில் எது குறைவோ அந்த எண்ணிக்கையில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். பார்வையாளர்கள் இரண்டு
8. ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை மேற்பார்வை செய்யும் அனைத்து துறை அலுவலர்களும் , நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களும் இரண்டு டோஸ் கொரோனா தடுப்பூசி போட்டதற்கான சான்று மற்றும் நிகழ்ச்சி நடைபெறும் தேதியிலிருந்து 2 நாட்களுக்குள் கோவிட் தொற்று இல்லை(RT -PCR Test) என்பதற்கான சான்று ஆகியவற்றை வைத்திருக்க வேண்டும்.
9. அனைத்து துறை அலுவலர்களும்,நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களும் , பார்வையாளர்களும் மற்றும் ஊடகத் துறை சார்ந்தவர்களும் அரசினால் அறிவுறுத்தப்பட்ட நடைமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும்.
10. வெளியூரில் வசிப்பவர்கள் ஜல்லிக்கட்டு நிகழ்வுகளை தொலைக்காட்சி மற்றும் இணைய வழியாக காண அறிவுறுத்தப்படுகிறது.
11. ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடத்த அரசின் முன் அனுமதி பெற்று பிராணிகள் வதை தடுப்பு (ஜல்லிக்கட்டு நெறிமுறைகள்) விதிகள், 2017, அரசினால் வெளியிடப்பட்டுள்ள ஜல்லிக்கட்டு நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் ஆகியவற்றுடன் அரசினால் விதிக்கப்படும் கொரோனா தடுப்பு கட்டுபாடுகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.